*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*09 09 2026 WEDNESDAY 6 45 AM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. *நிதி தொழில்நுட்ப பயணத்தில் இந்தியா புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

2. *இலங்கையுடனான நட்புறவை வலுப்படுத்துவதில், இந்திய வம்சாவளியினர் முக்கியப் பங்காற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

3. *தமிழகத்தில் 3 மாவட்ட ஆட்சியர்கள் உட்பட 14 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.*

4. *மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.*

5. *சென்னை, செங்கல்பட்டு உட்பட 10 மாவட்டங்களில் இன்றும் நாளையும் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

>>>>>><<<<<

*நிதி தொழில்நுட்ப பயணத்தில் இந்தியா புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*மும்பையில் நேற்று, உலக Fintech மாநாட்டில் உரையாற்றிய அவர், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தொழில்நுட்பத்தை மையமாக கொண்டு இந்தியா செயல்படுவதாக கூறினார்.*

*செயற்கை நுண்ணறிவு, Quantum போன்ற நவீன தொழில்நுட்பங்களை நிதித்துறையில் செயல்படுத்துவதன் மூலம் புதிய வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.*

கடந்த மாதத்தில், 2 ஆயிரத்து 400 கோடிக்கும் அதிகமான UPI பரிவர்த்தனைகள் நடைபெற்றிருப்பதை சுட்டிக்காட்டிய பிரதமர். நிதி தொழில்நுட்பத்திற்கு முன்னோடியாக UPI விளங்குகிறது என்று கூறினார்.

பணம் அனுப்பும் பரிவர்த்தனைகளில் உள்ள செலவுகளை குறைக்க, நிதி தொழில்நுட்ப அமைப்புகளில் உலகளாவிய ஒத்துழைப்பு அவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு நிறைந்த இணையம், நெறிமுறைகளுடன் கூடிய தரவுகள், வலுவான நிதி தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

இலங்கையுடனான நட்புறவை வலுப்படுத்துவதில், அங்கு வசிக்கும் இந்தியர்கள் முக்கியப் பங்காற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக இலங்கை சென்றுள்ள அவர், கொழும்புவில் நேற்று இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடினார்.

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே ஒரு பாலமாக இந்திய வம்சாவளியினர் திகழ்வதாக அவர் கூறினார்.

இலங்கையில் நெருக்கடி ஏற்படும் போதெல்லாம், அந்நாட்டிற்கு இந்தியா உறுதியுடன் துணை நின்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கலாச்சாரம், நம்பிக்கை, பாரம்பரிய வரலாற்றின் அடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகள் பரஸ்பரம் ஒன்றிணைந்துள்ளதாக அவர் கூறினார்.

அமைதி, வளம் மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, இந்தியாவும் இலங்கையும் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் 3 மாவட்ட ஆட்சியர்கள் உட்பட 14 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியராக திருமதி. சரண்யா ஹரியும், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியராக திரு. அப்துல் ரஷீக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியராக திரு. நல்லசிவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச்செயலாளராக திரு. மோகனும், பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமைச்செயலாளராக திருமதி. ஸ்ரேயா சிங்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<

தமிழகத்தில் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த த.வெ.க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தேசிய அளவில் காற்றின் தர மதிப்பீட்டு பட்டியலில், சென்னை 35வது இடத்திற்கு தள்ளப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளால் காற்றின் தரம் நாளுக்குநாள் அதிக மாசடைந்து வருவதை த.வெ.க. அரசு கவனத்தில் கொண்டு, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதன்மூலம் நுரையீரல் மற்றும் இதய நோய்கள் போன்ற ஆரோக்கிய குறைபாடுகள் ஏற்படுவதுடன் புவி வெப்பமயமாதல் உள்ளிட்ட பருவநிலை மாற்றத்திற்கும் வழிவகுக்கும்

என்பதால், மாநில அரசு உடனடியாக தொழிற்சாலைகளில் ஆய்வு செய்ய வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

மனுதாக்கல் வரும் 16ஆம் தேதிவரை நடைபெறும்.

மனுக்கள் மீதான பரிசீலனை அடுத்த நாள் 17ஆம் தேதி நடைபெறும்.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 19ஆம் தேதி கடைசி நாளாகும். வாக்குப்பதிவு அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறும். வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும்.

இதனிடையே, அஇஅதிமுக நிர்வாகிகள் திரு. கே.பி. முனுசாமி, திரு. திண்டுக்கல் சீனிவாசன், திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சென்னையில், பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனை நேற்று சந்தித்து, தங்கள் கட்சிக்கு ஆதரவு கோரினர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய திரு. கே.பி. முனுசாமி, இந்த தொகுதிகளில் ஏற்கனவே அஇஅதிமுக வெற்றி பெற்றதால், மீண்டும் தங்கள் கட்சி வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்களை உருவாக்கும் நோக்கில் மைபாரத்-தின் கீழ் இளைஞர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்தகைய போட்டிகள் நடத்தப்பட்டு வருவதாக அம்மாவட்ட இளையோர் அலுவலர் திரு. சபரி கிருஷ்ணா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - சபரி 50 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<*

*சென்னை, செங்கல்பட்டு உட்பட 10 மாவட்டங்கள் மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்றும் நாளையும் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல சுழற்சி மற்றும் தெற்கு தெலங்கானா முதல் ராயலசீமா வரையிலான தமிழக பகுதிகளில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், நாமக்கல், தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இரு தினங்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.*

*இதனிடையே, தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் உள்ள அருவிகளில் நீர்வரத்து குறைந்துள்ளதால், சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - செந்தில் 50 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<*

*இருவரிச் செய்திகள்*

*ஐரோப்பிய நாடுகளை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கம் இல்லை என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின், அமெரிக்க அதிபரிடம் உறுதியளித்துள்ளார்.*

*>>>>>><<<<<*

*மேற்காசிய பகுதிகளில் அமெரிக்காவும், ஈரானும் தாக்குதலை தீவிரப்படுத்தியிருப்பதால், அங்கு பதற்றம் நீடிக்கிறது.*

*>>>>>><<<<<*

*நேபாளத்தின் Mustang மாகாணத்தில் நேற்றிரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 5 புள்ளி 3-ஆக பதிவானது.*

*>>>>>><<<<<*

நாட்டின் ஆட்டோமொபைல் சில்லரை விற்பனை கடந்த மாதத்தில், 17 புள்ளி ஐந்து ஒன்று சதவீதம் அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

கடற்படை தளபதி அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன், ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

>>>>><<<<<

வேலூர் மாவட்டத்தில் தொழில் பூங்காக்களை அமைக்க நிதியுதவி பெற விரும்புவோர் காட்பாடியில் உள்ள மாவட்ட தொழில் மையத்தை அணுகி பயன்பெறலாம் என்று ஆட்சியர் திருமதி. லீலா அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டம், வேடல் கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை, ஆட்சியர் திரு. சினேகா நேற்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

உலக எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு, திருப்பூரில் உள்ள தனியார் மகளிர் கல்லூரி மாணவிகள், புத்தக வடிவில் அணிவகுத்து சாதனை படைத்தனர்.

>>>>><<<<<

பெங்களூருவிலிருந்து கடத்தி வரப்பட்ட 507 கிலோ போதைப்பொருட்களை, விழுப்புரம் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் காவல்துறையினர் பறிமுதல் செய்து, இரண்டு பேரை கைது செய்தனர்.

>>>>><<<<<

திருப்பூர் மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, காவல்துறையினர் பங்கேற்ற அணிவகுப்பு ஒத்திகை நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், வடவத்தூர் பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான சுமார் 89 ஏக்கர் நிலங்கள், பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு, 4 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்தி

அஹமதாபாதில் நடைபெற்று வரும் உலக பாரா வில்வித்தை போட்டியில், இந்திய வீரர்கள் இன்று பல்வேறு பிரிவுகளில் பங்கேற்கவுள்ளனர்.

>>>>>><<<<<